திருவண்ணாமலை வேடியப்பன் கோயில் தெருவில் உள்ள வேடியப்பன் குளத்தை, தூய்மை அருணை அமைப்பின் மூலம் சீரமைக்கும் பணியினை, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் தொடங்கி வைத்தார். உடன் சி.என்.அண்ணாதுரை.எம்.பி., இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், பா.அரிகிருஷ்ணன், இல.குணசேகரன் உட்பட பலர் உள்ளனர்.

திருவண்ணாமலை

‘தூய்மை அருணை’ மூலம் வேடியப்பன் குளம் சீரமைக்கப்படும்!

முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு குளத்தை பார்வையிட்டு ஆய்வில் தகவல்!

திருவண்ணாமலை, ஜூன் 23 -

திருவண்ணாமலை தூய்மை அருணை அமைப்பின் மூலம், வேடியப்பன் குளம் சீரமைக்கப்படும் என்று, வாரந்தோறும் நடைபெறும் தூய்மை அருணை பணிகளை முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தபோது செய்தியாளர்களிடம் கூறினார். ரூ.92இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட உடல் ஒப்பனை அகத்தை திறந்து வைத்தார். மழைக்காலத்தை முன்னிட்டு கால்வாய்களை பராமரித்தலை தீவிரப்படுத்த ஆலோசனை வழங்கினார்.

திருவண்ணாமலையில் தொண்டு செய்வோம், துணை நிற்போம் என்ற முழக்கத்தோடு கடந்த 7 ஆண்டுகளாக முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தூய்மை அருணை திட்டம் செயல்பட்டு வருகிறது. தூய்மை அருணை திட்டத்திற்கு 4 மேற்பார்வையாளர்களும், 39 வார்டுக்கு 39 ஒருங்கிணைப்பாளர்களும், மாடவீதி தூய்மைப் பணிக்கு 7 ஒருங்கிணைப்பாளர்களும் ஒவ்வொரு வார்டுக்கும் 25 தூய்மைக் காவலர்கள் என ஆயிரக் கணக்காணோர் மரம் நடுதல், பராமரித்தல், கால்வாய் மற்றும் தூர்வாருதல் என செயல்பட்டு வருகின்றனர்.

இதனைத் தொடர்ந்து, தூய்மை அருணை அமைப்பும், அருணை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையும் இணைந்து, கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நிகழ்ச்சி மாதந்தோறும் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டு, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு ஜூலை 16 அன்று தொடங்கி வைத்தார்கள். இது மாதந்தோறும் நடைபெற்று வருகிறது.

21.06.2026 ஞாயிற்றுக் கிழமை அன்று காலை 7.00மணிக்கு, திருவண்ணாமலை மாநகரில் நடைபெறும் தூய்மைப் பணிகள், நடப்பட்ட மரக்கன்றுகளை பராமரிக்கும் பணி ஆகியவற்றை முன்னாள் பொதுப்பணித் துறை அமைச்சரும், தூய்மை அருணையின் அமைப்பாளருமான எ.வ.வேலு அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

காலை 7.00 மணிக்கு வார்டு எண்21 அஜிஸ் காலனிப் பகுதிகளில் மண்மேடுகள், கால்வாய் அடைப்பு, மரக்கன்றுகள் பராமரிப்பதை பார்வையிட்டு, முன்னாள் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் ஆலோசனைகளை வழங்கினார்.

காலை 7.30மணிக்கு, வார்டு எண்.19 வேட்டவலம் ரோடு இரயில் பாதை அருகே உள்ள ஓடையை சீரமைப்பது குறித்து ஆய்வு செய்தார்.

காலை 7.45மணிக்கு, வார்டு எண்.10, வேடியப்பன் கோயில் தெருவில் உள்ள புதர்மண்டி, பராமரிப்பின்றி சீர்கெட்டு இருக்கும் வேடியப்பன் குளத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் செய்தியாளர்களிடம், முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு பேசும்போது... இந்த வேடியப்பன் குளம் தூய்மை அருணை அமைப்பின் சார்பில் சீரமைக்கப்படும் என்று கூறினார்.

பின்னர் காலை 8.15 மணிக்கு, வார்டு எண்.4 பெரியார் சிலை பின்புறம் உள்ள மசூதி அருகே நடைபெறும் தூய்மைப் பணிகளை பார்வையிட்டு, மரம் பராமரித்தல் குறித்து ஆலோசனைகள் வழங்கினார்.

காலை 8.30மணிக்கு, வார்டு எண்.2, அம்பேத்கர் தெரு அருகில் உள்ள அறிவொளிப் பூங்காவில் நடைபெறும் தூய்மைப் பணியினை பார்வையிட்டும், அங்கு விளையாட வந்த மாணவர்கள் முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு விடம் விளையாட்டு உபகரணங்கள் கோரி மனு அளித்தனர். அவர்களுக்கு உடனடியாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கிட மேற்பார்வையாளர்களிடம் கூறினார்.

காலை 8.45மணிக்கு, வார்டு எண்.1, பச்சையம்மன் கோயில் தெரு அருகில் உள்ள கருமாரியம்மன் கோயில் அருகில் நடைபெறும் வரும் தூய்மை பணி மற்றும் கால்வாய் தூர்வாரும் பணியினை பார்யிட்டு ஆய்வு செய்தார்.

காலை 9.00மணிக்கு, மலைவலப் பாதையில், தூய்மை அருணை அமைப்பால் பராமரிக்கப்படும் ரூ.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய உடல் ஒப்பனையகத்தை, ஆன்மீகப் பெருமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

ஒவ்வொரு வார்டிலும் ஆய்வு செய்த முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு அங்கு தூய்மை பணியில் ஈடுபடும் மாணவர்கள் மற்றும் பெண்களிடம் நலம் விசாரித்து, அவர்களை ஊக்கப்படுத்தினார்.

தூய்மைப் பணியில் தூய்மை அருணையின் மேற்பார்வையாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், ப்ரியா ப.விஜயரங்கன், இல.குணசேகரன், ஒருங்கிணைப்பாளர்கள் அ.கோவிந்தன், செ.எழில்மாறன், ஏ.ஏ.ஆறுமுகம், ம.வினோத்குமார், எஸ்.கே.டி.வீரா, வழக்கறிஞர்கள் ம.செந்தில், கிருஷ்ணமூர்த்தி, பா.அரிகிருஷ்ணன், வழக்கறிஞர் ந.சீனுவாசன், இரா.அருண், மெட்ராஸ்கே.சுப்பிரமணி, காலேஜ் கு.ரவி, கே.காளிதாஸ், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பி.ஆர்.நாகராஜ், கு.குமார், மண்டி.பிரகாஷ், மு.கருணாமூர்த்தி, இரா.ராஜாமணி, அ.திவாகர், அ.பழனி, கே.பிரகாஷ், பி.ஜி.முருகன், கோபி.சங்கர், சென்னை.சுரேஷ், முபாரக், லயன்.ஷெரீப். கா.ஏழுமலை, எஸ்.ஜாகீர், இரா.ஜோதி, கு.தியாகு, மூ.காமேஷ், ஹக்கிம்சேட், சி.கே.சசிக்குமார், கோல்டு. எஸ்.பிரபு மற்றும் மாடவீதி ஒருங்கிணைப்பாளர்கள் இல.குணசேகரன், சினம்.பெருமாள், ஆர். கே.பி.பாஸ்கர், ஜீவ ரேகா விஜயராஜ், அருணை. வெங்கட் உட்பட ஆயிரக் கணக்கான தூய்மைக் காவலர்களும் கலந்து கொண்டனர்.

திருப்பூர் பெருச்சிபாளையம் அரசு துவக்க மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

அமைச்சர் ஆய்வில் அவசர சிகிச்சை பிரிவிலும் ரீல்ஸ் மோகம்!

மருத்துவர்களுக்குத் தடை – த.வெ.க. ஐ.டி. விங் உறுப்பினர்களுக்கு அனுமதி!

திருப்பூர், ஜூன் 23 -

திருப்பூர் பெருச்சிபாளையம் அரசு துவக்க மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமைச்சர் ஆய்வுப்பணியில் ஈடுபட்டிருந்த போது, அவருடன் மருத்துவக்கல்லூரி மற்றும் மருத்துவமனை மருத்துவர்களும், உயர் அலுவலர்களும் தொடர்ந்து சென்றனர்.

அப்போது, அங்கிருந்த அமைச்சரின் ஆதரவாளர்கள் திடீரென மருத்துவக் கல்லூரில் ஆர்.எம்.ஓ. உள்ளிட்ட மருத்துவர்களையும், அலுவலர்களையும் உள்ளே செல்ல விடாமல் தடுத்து நிறுத்தினர்.

அதே வேளையில், கைகளில் செல்போன்களுடன் வந்திருந்த த.வெ.க. கட்சி ஐ.டி. விங் நிர்வாகிகளை அமைச்சரின் ஆதரவாளர்கள் எவ்வித தடையுமின்றி உள்ளே அனுமதித்தனர்.

இதேபோல் அவசர சிகிச்சை பிரிவில் அமைச்சருடன் மருத்துவர்கள் அலுவலர்களை காட்டிலும் அவரது ஆதரவாளர்களும், த.வெ.க. ஐ.டி.விங் எனக் கூறிக்கொண்டு மொபைல் போனுடன் அதிகம் பேர் சென்றனர்.

மருத்துவர்களுக்கும், சிகிச்சை அளிப்பவர்களுக்கும் இடையூறு ஏற்படுத்தும் வகையில் அமைச்சர் ஆய்வை ஒவ்வொரு பக்கத்தில் இருந்து வெவ்வேறு கோணங்களில் வீடியோ எடுத்தபடியே சென்றனர்.

இதனால் மருத்துவர்கள் பெரும் சிரமத்திற்குள்ளாகினர்.

தாம்பரம் மாநகரம், பம்மல் வடக்கு பகுதி, 3வது வட்டத்தில் அ.தி.மு.க. மற்றும் மாற்றுக் கட்சியில் இருந்து விலகி காஞ்சிபுரம் வடக்குச் செயலாளர் இ.கருணாநிதி, பம்மல் வடக்குப் பகுதி செயலாளர் த.ஜெயகுமார், வட்ட கழக செயலாளர் க.மோகன் ஆகியோர் முன்னிலையில் அ.தி.மு.க.வினர் மற்றும் மாற்றுக் கட்சியினர் எஸ்.மோகன், பி.வஜ்ரவேல், கர்ணா, ஜே.கௌதம், பி.சூர்யா, பி.கார்த்திக், ராகுல் ஆகியோர் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு,எழும்பூர் தெற்கு பகுதி, 61வது வட்டத்தில் மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு 500 பேருக்கு அறுசுவை உணவும்,மகளிர்க்கு நலத்திட்ட உதவிகளும் வழங்கினார்.பகுதிச் செயலாளர் வி.சுதாகர், வட்டச் செயலாளர் டால்பின் எஸ்.அரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை வட்ட துணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.வின்சென்ட் செய்திருந்தார். இதில் அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

பி.எம்.ஸ்ரீ. திட்டம் மூலம் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க.அரசைக் கண்டித்தும் – நான் முதல்வன் திட்டப் பெயரை மாற்றிய த.வெ.க.அரசைக் கண்டித்தும்

தி.மு.க. மாணவரணி இன்று நடத்தும் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட மாணவரணியினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர் க.சுந்தர் வேண்டுகோள்!

காஞ்சிபுரம், ஜூன் 23-

மும்மொழிக் கொள்கை என்ற பெயரில் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும், நான் முதல்வன் திட்டத்தின் பெயரினை மாற்றிய த.வெ.க. அரசைக் கண்டித்தும் தி.மு.க. மாணவரணி சார்பில் இன்று (23.6.2026) நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டக் கழக மாணவரணியினர் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமாய் மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

இது குறித்து மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் விடுத்துள்ள வேண்டுகோள் அறிக்கை வருமாறு:

தமிழ்நாட்டில் பி.எம். ஸ்ரீ. திட்டம் மூலம் இந்தியைத் திணிக்க ஒன்றிய பா.ஜ.க.அரசு முயற்சித்து வருகிறது.

சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் இந்தியைத் திணிக்கும் வகையில் மும்மொழிக் கொள்கையை திணிக்க நடவடிக்கையை ஒன்றிய பா.ஜ.க. அரசு எடுத்து வருகிறது. சி.பி.எஸ்.சி. பள்ளிகளில் 9-ஆம் வகுப்பில் மும்மொழிக் கொள்கையை திணிக்க ஒன்றிய பா.ஜ.க.அரசு தீர்மானித்து அதன் முதற் கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தொடங்கி விட்டது. இதற்கு த.வெ.க. மௌனஅரசு வாய்திறக்கவில்லை. மேலும் நீட் வினாத்தாள் கசிவு, தமிழகத்திற்கான ஒன்றிய அரசின் கல்வி நிதி நிலுவை,

அது மட்டுமல்லாமல் திராவிட மாடல் ஆட்சியில் மாணவர்களின் கனவு, இளைஞர்களின் கனவுகளை நிறைவேற்றிய திட்டம் தான் நான் முதல்வன் திட்டம், இத்திட்டத்திற்கு தற்போதைய த.வெ.க. அரசு “திறன் தமிழ்நாடு” (கூசூ ளுமடைட) என்று பெயர் மாற்றம் செய்துள்ளது. ஏழை மாணவர்களின் ஐ.ஏ.எஸ., ஐ.பி.எஸ். கனவை நனவாக்கும் கழகத் தலைவரின் உண்ணதமான திட்டங்களில் இத்திட்டமும் ஒன்றாகும்.

இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் ஏழை எளிய மாணவர்கள் ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். என்று உயர் பதவியில் அமர்ந்த வரலாறுகள் தமிழகத்தில் உண்டு. அப்பெருமை எல்லாம் கடந்த கால திராவிட மாடல் ஆட்சி குறிப்பாக முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு சென்று விடுமோ என்று அஞ்சிய மௌவுன முதல்வர் இத்திட்டத்திற்கு எடுத்தேன் கவிழ்த்தேன் என்கிற வகையில் இப்பெயரை மாற்றம் செய்துள்ளார்.

இதனையும் கண்டிக்கும் வகையிலும் இம் மும்மொழிக் கொள்கையை திணிப்பதை உடனடியாக கைவிட வலியுறுத்திடவும் கழகத்தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படியும், சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும்

தி.மு.க. மாணவர் அணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று சென்னை அண்ணா அறிவாலயத்தில் மாணவரணிச் செயலாளர் வீரமணி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் படி இன்று (23.6.2026) காலை 9 மணிக்கு சென்னை சைதாப் பேட்டை, கைஞர் பொன் விழா வளைவு அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற வுள்ளது.

இந்த மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் நமது காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் இருந்து மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர், வார்டு கிளைக் கழகங்களைச் சேர்ந்த மாணவரணி நிர்வாகிகள், மாணவரணியினர், கல்லூரி மாணவர்கள் என்று நமது மாவட்டத்திற்கு மாணவரணியினால் பெருமை கிடைத்திடும் வகையில் ஆயிரக் கணத்தில் பெருந்திரளாக மாணவர்கள் கலந்து கொண்டு இம் மாபெரும் மாணவரணி ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான கே.எஸ்.மூர்த்தி தலைமையில், ஆலோசனைக் கூட்டம் திருச்செங்கோட்டில் உள்ள மாவட்டக் கழக அலுவலகமான தளபதி அரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் சுரேஷ் குமார், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பாலசுப்பிரமணியம், நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. தலைமை நிலைய செயலாளர் பூச்சி எஸ்.முருகன், நேற்று முன்தினம் (21.06.2026) பள்ளிக்கரணை கிளப் ஹாலில் நடைபெற்ற, தொழிலாளர் முன்னேற்ற சங்க செயலாளர் ஐ.சி.எஃப். பி.துரை அவர்களின் 80வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொண்டு வாழ்த்தினார்.